| | | |
|---|---|---|
| **O.S No.** | **:** | **85/2020** |
| **DATE** | : | **04.08.2025** |
| **NAME** | : | **சாந்தி** |
| **Husband's Name** | : | **செல்வராஜ்** |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை**

**1.** தாவா சொத்தின் கதவு எண் 48, அம்பேத்கர் நகர், சர்வே எண் 21 ஆகும். தாவா சொத்தின் முன் பகுதி சம்மந்தமாக பரிகாரம் கோரியுள்ளேன். முன் பகுதியின் நீளம், அகலம் எவ்வளவு என்றால் நீளம் 151 அடி, அகலம் 48 அடி ஆகும். 1978ல் பாகம் பிரித்ததாக சொல்லியுள்ளேன் அது யார் யாருக்கு இடையே நடந்தது, அதற்கான ஆவணம் உண்டா என்றால் பாகம் பிரிக்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 3ல் ABCD என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் வா.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் ABC என்று 3 பாகங்கள் தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது மாதிரி வரைபடத்தில் ABC என குறிப்பிடப்படும் பாகங்கள் செல்வராஜ், சிந்தாமணி, ஏகாம்பரத்திற்கு சொந்தமானது. அந்த உரிமையை காட்டும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் பிரதிவாதி சந்தானம் ஏகாம்பரத்தின் மகன் ஆவார். பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையையும் ஆவணங்களையும் நான் பார்க்கவில்லை. நத்தம் முதலில் புறம்போக்காக இருந்து பின்னர் நத்தமாக மாற்றப்படும் என்ற விவரம் தெரியும். நத்தம் பட்டா கொடுத்த போது மொத்த தாவா சொத்திற்கும் பட்டாவானது செல்வராஜ் மற்றும் ஏகாம்பரத்திற்கும் பட்டா கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மற்றும் தற்போதைய காலகட்டத்தில் தாவா சொத்து முன்புறத்தில் நாங்களும் எங்களது அனுமதியின் பெயரில் எனது நாத்தனாரும் குடியிருக்கிறோம். தற்போது எனது குழந்தைகளின் படிப்பிற்காக நான் அங்கு இல்லை. எனது கணவர் செல்வராஜ் காலமாகிவிட்டார். நான்

தற்போது நத்தம்பேட்டையில் வசிக்கிறேன் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு ஆதிதிராவிடர் நத்தம் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

4. வா.சா.ஆ–1, 1980ல் எனது கணவர் கிரையம் வாங்கியதாக ஒரு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் அந்த சொத்தில் தற்போது யார் குடியிருக்கிறார்கள் என்றால் நான் தான் அங்கு குடியிருக்கிறேன். அந்த கிரையமானது சிந்தாமணி வகையாராவிடம் இருந்து பெறப்பட்டது என்றால் சரிதான். தற்போது சிந்தாமணி வகையராவிற்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரிதான்.

5. வா.சா.ஆ.3 தோராய பட்டா தாக்கல் செய்துள்ளேன் அதில் சிந்தாமணியின் மகன் மகேந்திரன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் செல்வராஜ் மனைவி வசந்தி மற்றும் முருகன் மகன் ஏகாம்பரம் என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு மூலத்தின் அடிப்படையில் தற்போது சிந்தாமணி வகையராவிற்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

6. வா.சா.ஆ– 9 புகைப்படங்கள் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் காணப்படும் கூரைப்பகுதியில் உள்ள துணிகள் காயப்போட்டுள்ள பகுதி எனது முன்பகுதி ஆகும். அந்த புகைப்படங்களில் காணப்படும் அடிக்கல் நாட்டப்பட்டு எழுப்பப்படும் கட்டிட பகுதியானது செல்வராஜிற்கு சொந்தமானது. அந்த புகைப்படத்தில் பிரதிவாதியின் சொத்து காண்பிக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து பகுதியில் ஏகாம்பரத்திற்கு சொத்து பின்பகுதியில் உள்ளது. அந்த வீட்டை புகைப்படத்தில் காட்டவில்லை என்றால் சரிதான்.

7. தாவா சொத்தின் முன் பகுதியில் எனது வீடு அமைந்துள்ளது. பின் பகுதியில் பிரதிவாதியின் வீடு அமைந்துள்ளது என்று சொன்னால் பொது இடத்திலும் சேர்த்து வீடு கட்டியுள்ளார். பிரதிவாதி எவ்வளவு இடத்தில் வீடு கட்டியுள்ளார், அவருக்கு எவ்வளவு இடம் சொந்தமானது என்பதை குறிப்பிட்டு

வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் எவ்வளவு இடம் என்று எனக்கு தெரியாது, நாங்கள் பின்பக்கம் செல்வதற்கு இடம் எதுவும் கிடையாது.

8. தாவாவில் நான் உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் தான் கோரியுள்ளேன், விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். நான் கோருவது போல பொது இடத்தில் கட்டிடம் கட்டியிருந்தால் அதனை இடிக்க நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் ஆணையர் தாவாவை பார்வையிடும் போது நான் அங்கு இருந்தேன்.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.